**இரத்மலானை / மொறட்டுவ கழிவுநீர் அகற்றல் செயற்திட்டம் - கட்டம்- 02, பிரிவு 01 - 2022**

---

இரத்மலானை / மொறட்டுவ கழிவுநீர் அகற்றல் செயற்திட்டம் - கட்டம் - 02, பிரிவு 01 இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவருக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2019 பெப்ரவரி 18 ஆந் திகதிய சீஎல்கே 1023 - 01 எல் ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3(ஜே) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழுங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய தேசிய நீர் வழுங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது.

இரத்மலானை குடியிருப்பாளர்களிற்கும் (95,000 குடியிருப்பாளர்) மற்றும் மொறட்டுவவிலுள்ள குடியிருப்பாளருக்கும் (167,000 குடியிருப்பாளர்) கழிவகற்றல் சேவைக்கான நுழைவினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகவுள்ளது.
கழிவகற்றல் சேகரிப்பு வலையமைப்பு, புதிய பம்ப் நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் தற்போதுள்ள பம்ப் நிலையங்கள், சுத்திகரிப்பு பொறி மற்றும் உள்ளக சொத்து வலையமைப்பு மாற்றஞ்செய்தல் மற்றும் உள்ளகச் சொத்து வலையமைப்பு, நிர்மாணம் மற்றும் மேற்பார்வை ஆலோசனை என்று பெயரிடப்பட்ட 04 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டது.
கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 21,682.36 மில்லியனிற்கு சமமான யூரோ 105.5 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 15,414.00 மில்லியனிற்கு சமமான யூரோ 75 மில்லியன் பிரான்ஸ் டி அபிவிருத்தி முகவர் வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 6,268.36 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கபட்டது.
செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 யூலையில் தொடங்கியிருந்ததுடன் 2024 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நி-

கழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை.்.கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 01.்.2019 ஆம் இலக்க முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | ஒழுங்குபடுத்தல் குழுக்கூட்டம் 02 மாதங்களுக்கு ஒரு தடவை நடைபெறவேண்டியபோதிலும் 2019 இலிருந்து 2022 வரையான காலப்பகுதியின் போது ஒரேயொரு கூட்டம் மாத்திரம் நமைபெற்றிருந்தது. | கொரோனா பரவல் காலங்களில் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை. என்எஸ்சீ கூட்டங்கள் நடைபெற்றிருக்காதபோதும் மாதாந்த மீளாய்வுக்கூட்டம் அமைச்சின் செயலாளருடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. பௌதீகச் செயன்முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம்

மெஹா செயற்திட்டங்களின்(ஆர்ஏஎம்பீ) மீள்தந்திரோபாய மற்றும் மற்றும் ஒண்றினைத்தல் மீதான இலங்கை அரசாங்க அலுவலர்கள் குழுவால் கடன் மீள்கொடுப்பனவுகள் பிற்போடப்பட்டமையால் மேலதிக அறிவுறுத்தல் வரை செயற்திட்ட நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்துவதற்கு சிபாரிசு செய்யப்பட்டது. அதற்கிணங்க மாற்று நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றம் பின்வருமாறுள்ளது.

| இல | செயற்திட்டக் கூறு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவப் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|---|
| (அ) | கழிவகற்றல் சேகரிப்பு வலையமைப்பினை முன்னேற்றுதல் | இந்தக் கூறின் நிர்மாண ஒப்பந்தம் 2021 திசெம்பர் இல் கைச்சாத்திடப்பட்டதுடன் ஆரம்ப முற்பணமாக ரூபா 1,427 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், கடன் வழங்கலானது நிறுத்தப்பட்டமையால் பட்டியலிடப்பட்ட | முற்பணம், காப்புறுதிகள் மற்றும் செயலாற்றல் முறிகள் போன்ற முன்-நிர்மாண நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கலின் பின்னர் 12.05.2022 இல் நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்டிருந்தது. பொருளாதார சிக்கல் | முகாமைத்துவமானது ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டியதுடன் சீரமைக்கப்பட்ட வேலைகள் பூர்த்தி செய்வதன்மூலம் முற்பணம் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கைகள் தொடங்கப்படாததுடன் சீரமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமானது தற்போது செயற்படுகின்ற பம்பிங் நிலையங்களுடன் தொடர்புடைய ஒன்பது செயற்பாடுகனை தெரிவு செய்வதன் மூலம் ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்தப்பட்ட முற்பணத்தொகையை மேவுகை செய்வதற்கு தயாரிக்கப்பட்டது. மேலும், எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றம் இல்லாது 12 மாதங்கள் காலப்பகுதிக்காக ரூபா 1,427 மில்லியன் முற்பணத்தொகையை ஒப்பந்தகாரர் பிடித்து வைத்திருந்தார்கள். | நிலைமைகளே நிர்மாண வேலைகளின் தாமத முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகவுள்ளது. | |
| (ஆ) | புதிய பம்ப் நிலையங்களை ள நிர்மாணித்தல் மற்றும் தற்போதுள்ள பம்ப் நிலையங்கள் மற்றும் சுத்திகரிப்புப் பொறியினை மாற்றீடு செய்தல். | இது 2024 திசெம்பர் 31 இற்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட வேண்டியபோதிலும், ஒப்பந்தமானது 2023 பெப்ரவரி 28 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லைபெ ன்பதுடன் பெறுகை செய்முறைகள், விலைமனு விண்ணப்பதாரர்களை மதிப்பிடுதல் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | ரீஈசீ மற்றும் எஸ்சீஏபீசீ 2022 சனவரியில் நியமிக்கப்பட்டிருந்தது. ரீஈசீ அறிக்கை ஏப்ரல் இல் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2022 யூலை 29 இலிருந்து அமுலாகும் வரையில் அரசாங்கத்தால் மீள்கொடுப்பனவு இடம்பெற்றமையால் ஏஎப்டீ மீள்வழங்கல்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தமையால் எஸ்சீஏபீசீ விலைமனு ஆவணங்களை கோருவதற்கு அனுமதித்திருக்கவில்லை. | திறைசேரியிடமிருந்து நிதி உதவியைப் பெறுவதன்மூலம் எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளை தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிர்மாணம் மற்றும் ஆலோசனை மேற்பார்வை | பெறுகைச் செய்முறையில் ஏற்பட்ட காரதாமதத்தால் 2023 பெப்ரவரி 15 அளவிலும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | விலைமனு மதிப்பீடு செய்முறையிலுள்ளது. புதிய அமைச்சரை நியமித்த பின்னர் மற்றும் அலுவலர்கள் ஓய்வுபெற்ற பின்னர் செயலாளரை மாற்றிய பின்னர் சில சீபீசீசீ உறுப்பினர்களை மீள்நியமிக்க வேண்டியுள்ளது. | பெறுகைச் செய்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுடன் அமைச்சு அலுவலர்களின் மாற்றமானது பெறுகைச் செய்முறையில் ஏற்பட்ட முக்கியமான காலதாமதத்திற்கு காரணமாக அமையாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | காணி சுவீகரிப்பு | செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய போதிலும் கழிவுநீர் பம்ப் நிலையங்களின் நிர்மாணத்திற்கு தேவையான ஆறு நிலத்துண்டுகள் 2022 திசெம்பர் 31 வரையிலும் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 07 பம்ப் நிலையங்களிற்கான காணி சுவீகரிப்பு வேலைகள் 2016 யூலையிலிருந்து பீஎம்யூ ஆல் தொடங்கப்பட்டிருந்ததுடன் பொது மற்றும் காணி உரிமையாளர்கனிடமிருந்தான முறையீடுகள், அளவைத்திட்டங்களில் ஏற்பட்ட காலதாமதங்கள், அமைச்சர்கள் மற்றும் அவர்களின் பெயர்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணிகளை முன் ஒதுக்கீடு செய்தல் போன்ற இயற்கையான தாமதங்களால் சுவீகரிப்புச் செய்முறை மிக மெதுவான செய்முறையிலிருந்தது. | காணி சுவீகரிப்புச் செய்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டு |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவப் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | அமைச்சு மட்ட பெறுகைக் குழு தேசிய பெறுகை முகவராண்மையின் சேவை வழிகாட்டல்களுக்கமைய மொறட்டுவப் பல்கலைக்கழகத்திற்கு சாக்கடையை மூடுகின்ற வலையமைப்பினை விரிவாக்குவதற்கான சூழல் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு சிபாரிசு செய்தபோதிலும் மேற்கூறப்பட்ட சிபாரிசுடன் இணங்காமல் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிக்கு ரூபா 8 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியில் செயற்திட்டம் வழங்கப்பட்டிருந்தது.. | அழைப்புக் கடிதம் 2017 நவம்பர் 16 இல் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதுடன் அவர்களிடமிருந்து பதில்கள் 2017 திசெம்பர் 5 இல் விலைமனுக்களை மூடுவதற்கு முன்னர் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. மத்திய சூழல் அதிகாரசபையால் (சீஈஏ) வெளியிடப்பட்ட ஈஐஏஆர்எஸ் இன் தொழில்நுட்ப வழிகாட்டல்ஃ. தயாரித்தல் போன்றவற்றிற்கான பதிவுசெய்யப்பட்ட ஆலோசனை அமைப்புக்களின் பட்டியல்களின் பிரகாரம், யுனி ஆலோசனை சேவைகளின் பெயரும் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் கீழ் கொடுக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டலுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட அலுவலகம் 2016 இல் தாபிக்கப்பட்ட போதும் 20 உத்தியோகத்தர்கள் 2016 இலிருந்து வேலைக்கமர்த்தப்பட்ட போதிலும் ஒப்பந்தமொன்று மாத்திரம் வழங்கப்பட்டதுடன் ஏனைய கூறுகளின் ஒப்பந்தம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2016 இலிருந்து செயற்திட்ட | 2016 இலிருந்து 2021 வரையிலும் முன் ஒப்பந்த நடவடிக்கைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகள் 2022 இல் தொடங்கப்பட்டிருந்தது. ஆகையால், ஒப்பந்தகாரர் நகர்த்தப்பட்ட பின்னர் 2022 இலிருந்து மாத்திரம் உண்மையான பௌதீகச் செயன்முறை மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் ஆலோசனையாளரின் கீழ் இந்த வகையான | செயற்திட்ட உத்தியோகத்தர்களின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கும் முறையான மதிப்பீட்டிற்காக புதிய செயலாற்றல் குறியீடுகளை தாபிப்பதற்கும் |

| | | |
|---|---|---|
| அலுவலகத்தை பராமரிப்பதற்கு ரூபா 227 மில்லியன் செலவழிக்கப்பட்ட போதிலும் உத்தியோகத்தர்களின் மந்தமான செயன்முன்னேற்றம் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரிவான பொறியியல் வடிவமைப்பினை நடாத்துவதற்காக பீஎம்யூ உத்தியோகத்தர் மற்றும் ஆலோசனையாளர்களிற்காக அதிகூடிய செலவீனங்களை ஏற்படுத்த வேண்டியிருக்கும். கூடிய செயலாற்றலுடன் பீஎம்யூ உத்தியோகத்தர்களை வைத்திருந்தமையால் செயற்திட்டத்தால் அதிகூடுதலாக செலுத்தப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து வழிகாட்டலைப் பெறாமல் இந்த இலக்கை அடைந்திருக்கமுடியும். | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவப் பதில்** | **கணக்காய்வாளரின் சிபாரிசு** |
|---|---|---|
| 2019 இலிருந்து 2022 வரையான காலப்பகுதியில் தாமதமான நிதியங்களைப் பயன்படுத்தியமையால் மீளளிக்கப்படாத கடன் மீதிக்காக கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 248 மில்லியன் பொதுத்திறைசேரிக்கு செலுத்தப்பட்டது. | கடன் உடபடிக்கையின் பிரகாரம் வழங்குனர்களுக்கு கடப்பாட்டுக் கட்டணங்களைச் மேற்கொள்வதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. இது தொடர்பில் நாங்கள் எந்தவிதமான அறிக்கைகளையும் பெறாமையால் இதனை சரியான தன்மையை தெளிவுபடுத்துவதற்காக கடப்பாட்டுக் கட்டணங்கள், வட்டிக் கட்டணம் மற்றும் மதிப்பீட்டுக் கட்டணம் போன்றவற்றை ஈஆர்டீக்கு அனுப்பியுள்ளோம். | பகிரப்பட்ட திட்டத்தின் பிரகாரம் நிதியைப் பயன்படுத்துவதற்கும் கடப்பாட்டுக் கட்டணங்களைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |